1990 மார்ச் 23]

திரு. குமரி அனந்தன் ; தலைவர் அவர்களே, ஆயாக்களுக்கு சீருடை வழங்கும் திட்டம் அரசிடம் இல்லையென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். முழு அளவில் சீருடை வழங்க முடிய வில்லை என்றாலும், உணவு தயாரிப்பு, பரிமாறல் போன்ற பணி கள் இருக்கிற காரணத்தால் 'ஆப்ரன்' என்று சொல்லப்படுகிற மேலுடையாவது அவர்களுக்கு அளிப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, அதுபற்றிய தேவை எதுவும் தற்போது எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நெருப்பு பற்றிக் கொள் ளாமல் இருக்க கவசம் எதுவும் அணிய வேண்டிய தேவை இருக் குமா ? (சிரிப்பு).

ஈரோட்டில் தோல் பதனிடும் கூடம்

*3385 **திரு. ஜி. ஜி. குருமூர்த்தி** ;

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பெரியார் மாவட்டம், ஈரோட்டில் அரசு தோல் வாரியம் மூலம் தோல் பதனிடும் கூடம் ஒன்று அமைக்க முன்வருமா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி ; தலைவர் அவர்களே, நமது மாநிலத்தின் மற்ற இடங்களில் வேறு ஏதாவது தோல் பதனிடும் கூடம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர்களே, தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனத்தின்கீழ் விண்ணமங்கலத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலை ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முழு அளவில் செயல் படுவதற்குத் தேவையான ஆர்டர்கள் நமக்கு கிடைக்காத கார ணத்தால், அந்த நிறுவனமே இப்பபோது நஷ்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் காரணத்தால் தான், மேற்கொண்டு இன்னொரு நிறுவனத்தை நிறுவுகிற யோசனை அரசிடம் பரி சீலனையில் இல்லை.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS